**05.03.2024 MCOP.No.37/2021**

**ம.சா.1  பெயர்:** லட்சுமி

**<u>சாட்சி ஆஜர். பிரமாணம் செய்யயப்பட்டார்  எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

விபத்து இறந்து போனது என் மகன் ஆவார். இறந்த என் மகனுக்கு திருமணம் ஆக வில்லை என்றால் சரிதான். விபத்தினை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். என் மகன் தனியார் நிறுவனத்தில் பணியில் இருந்ததற்கு பணி நியமன ஆணை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மகனின் மாத வருமானத்திற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ரூ.30,000/- மாதம் மாதம் கொடுத்து வந்தார். மேற்படி தொகை பெற்று வந்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மகனின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது உண்மை இல்லை என்றால் என் மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் ஆகவே தாக்கல் செய்வில்லை என்றால் சரியல்ல. விபத்தில் சம்பந்தப்பட்ட இரு சக்கர வாகனம் என் மருமகனுக்கு சொந்தமானது ஆகும். விபத்தை கேள்விப்பட்டு தான் தெரியும் என்றால் சரிதான். விபத்தில் இரு வாகனங்களும் நேருக்கு நேர் மோதி கொண்டது என்றால் ஆமாம். விபத்து தார் சாலையின் மையப்பகுதியில் ஏற்பட்டதா என்றால் இல்லை. என் மகனுக்கு தலையில் காயங்கள் ஏற்பட்டு தான் காலம் ஆகிவிட்டார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் தலைகவசம் அணிந்து சென்று இருந்தால் தலையில் காயம் ஏற்பட்டு இருக்காது என்றால், சாட்சி முதலில் சரி என்றும் பின்னிட்டு தலைக்கவசம் அணிந்து சென்றதாகவும் கூறுகிறார். மனுவில் என் மகன் விபத்து சமயத்தில் தலைகவசம் அணிந்து சென்று இருந்ததாக குறிப்பிட்டவில்லை என்றால் சரியல்ல. என் மகன் ஓட்டி சென்ற வாகனத்தில் உரிமையாளர் காப்பீட்டு நிறுவனத்தினை தரப்பிராக சேர்க்காத காரணத்தினால் மனு தள்ளுபடி செய்ய தக்கது என்றால் சரியல்ல. விபத்திற்கு என் மகன் அஜாகரத்தையும், கவண குறைவும் காரணம் என்றால் சரியல்ல, என் மகன் சரியாகதான் சென்றான். இரு சக்கர வாகனத்தின் உரிமையாளரும் காப்பீட்டு நிறுவனும் விபத்து சம்பந்தமாக இழப்பீடு தர கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்பில் கோரிய இழப்பிட்டு உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு காலம் சென்ற மகனை தவிர வேறு யார் வாரிசாக உள்ளது என்றால், ஒரு பெண் குழந்தை இருக்கிறார். விபத்து சமயத்தில் என் மகன் தொழில் பயிற்ச்சிக்காக சேர்ந்து இருந்தார் என்றால் சரியல்ல, அவர் வேலையே செய்துகொண்டு இருந்தார். கோரிய இழப்பீட்டு தொகை மிகவும் அதிகமானது என்றால் சரியல்ல. என் மகன் வேலைக்கு செல்லவில்லை என்றாலும் பயிற்ச்சிக்காக சென்றார் என்லும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல, 3 ஆண்டு காலமாக வேலை செய்து வந்தார். 3 ஆண்டுகளாக வேலை செய்தற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

SENTHIL KUMAR RAJAVEL

Subordinate Judge
Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL
Location: Uthangarai